DEPOSITION OF WITNESS

(CHAPTER XXII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE , SENDAMANGALAM

C.C.No.262/2025

PW - 6

| | | |
|---|---|---|
| Name | : | முரளிதரன் (Lw - 2) |
| Father / Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969(Central Act 44 of 1969 on the ------------day of ----------26

**(**எதிரி ஆஜர் இல்லை **BNSS** பிரிவு **355-**ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது**.)**

**BNSS** பிரிவு **348-**ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டதன் பேரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

குறுக்கு விசாரணை **Date : 17.03.2026**

பண்ணைக்காரன்பட்டி பேருந்து நிறுத்தத்திற்கு பின்புதான் விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். போலிசார் என்னை இரண்டுமுறை விசாரித்தார்கள். எதிரியின் பெயர் என்போது எனக்கு தெரியும் என்றால் விபத்து நடந்த அன்றே தெரியும். எதிரியின் பெயர் பழனிச்சாமி அவர் பவித்திரத்தை சார்ந்தவர். சம்பவத்திற்கு பின்பு என்னுடைய வாகனம் சம்பவ இடத்தில் தான் இருந்தது என்றால் சரிதான்.

பழனிசாமியின் வாகனம் எனது வாகனத்தை தாண்டி சிறிது தூரம் தள்ளி இருந்தது என்றால் சரிதான். ஒரு வீட்டின் வாசலில் இருந்தது. எனது அப்பா கம்யுனிஸ்ட் கட்சியில் மாவட்ட செயற்குழு உறுப்பினராக இருந்து வருகிறார் என்றால் சரிதான். நான், எனது அப்பா மற்றும் எதிரி பழனிசாமி ஆகிய மூவரையும் ஒரே ஆம்புலன்சில் கொண்டு சென்றுதான் நாமக்கல் அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனையில் அனுமதித்தார்கள் என்றால் சரிதான்.

சம்பவத்தன்றே அன்று இரவு எதிரி பழனிசாமியை சேலம் நியூரே பவுண்டேஷன் மருத்துவமனைக்கு கொண்டு சென்றுவிட்டார்கள் என்றால் சரிதான். அங்கு எதிரி பழனிசாமி எத்தனை நாட்கள் சிகிச்சை எடுத்துகொண்டார் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். சம்பவத்திற்கு அடுத்த நாளே நான் சிகிச்சை முடிந்து வீடு திரும்பிவிட்டேன் என்றால் சரியல்ல. 6 முதல் 7 நாட்கள் வரை நான் சிகிச்சையில் இருந்தேன்.

பண்ணைக்காரன்பட்டி ரோட்டின் தெற்கு பக்கம் ரவி என்பவரது டீ கடை உள்ளது என்றால் சரிதான். விபத்து நடந்த பகுதியானது மேற்படி டீ கடையில் இருந்து வடக்கு பக்கம் உள்ளது என்றால் சரிதான். வண்டியை நான் தான் ஓட்டி சென்றேன் என்றால் சரியல்ல. எனது அப்பா ஓட்டி சென்றார். எனது அப்பா LIC முகவராக உள்ளார் என்றால் சரிதான்.

எனது அப்பா 60 வயதிற்கு மேல் ஆனவர் என்றாலும், அதனால் அவர் வண்டியை தென்புறம் உள்ள ரவி டீ கடையை நோக்கி திடீர் என்று திருப்பியதால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கையின் நகலை நான் தான் பெற்றுகொண்டேன் என்றால் சரிதான். எனது அப்பா கவனக்குறைவாக வண்டியை திருப்பியதால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. இந்த விபத்திற்கும் எதிரிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றும், எதிரிக்கு ஆதவராக வழக்கு போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை: இல்லை.

**Taken down before me in open court and read/interpreted to the witness and acknowledged by him/ her to be correct.**

**Sd/- Tr.S.Raja Kumaran B.E. L.L.B.,**
**Judicial Magistrate,**
**Sendamangalam**